# அனைத்து கலை கலாசார பீட மாணவர்களுக்குமான அறிவித்தல்

25.04.2022ம் திகதி நடைபெற்ற 04/2022ம் சிரேஷ்ட முகாமைத்துவ குழு (SMC) கூட்டத்தின் தீர்மானத்தின்படி கலை கலாசார பீட 2015/2016, 2016/2017, 2017/2018 மற்றும் 2018/2019 கல்வியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் நேரடியாக (onside lectures) பல்கலைக்கழக வளாகத்தினுள் எதிர்வரும் 04.05.2022ம் திகதியிலிருந்து நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 2019/2020 கல்வியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் நிகழ்நிலை (online) மூலமாக எதிர்வரும் 04.05.2022ம் திகதியிலிருந்து நடைபெறும்.

அத்துடன் 2020/2021 கல்வியாண்டு மாணவர்களுக்கான நோக்கு நிலை (Orientation programme) நிகழ்நிலை (online) மூலமாக எதிர்வரும் 04.05.2022ம் திகதியிலிருந்து நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதி வசதிகளை பெற்றுள்ள மாணவர்கள் எதிர்வரும் 01.05.2022 ம் திகதியிலிருந்து விடுதிகளுக்கு சமூகமளிக்கலாம். விடுதி சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு சிரேஸ்ட உதவி பதிவாளர், மாணவர் விவகாரங்கள் திணைக்களத்தினை தொடர்புகொள்ளவும்.
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் - 0652240731

திருமதி. மு. ச. ஜ. மும்தாஜ் சமீம்
பிரதி பதிவாளர்,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
29.04.2022

பிரதி: பீடாதிபதி / கலை கலாசார பீடம்
துறைத்தலைவர்கள் மற்றும் இணைப்பாளர்கள் / கலை கலாசார பீடம்
பணிப்பாளர் / தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப மையம்
பதிவாளர் / கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
சிரேஷ்ட உதவி பதிவாளர் / மாணவர் விவகாரங்கள் திணைக்களம்